**சுருக்கம்**

முழு சுகாதார இயக்கம் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.4.2012 அன்று வெளியிட்ட அறிக்கை – தனிநபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை ரூ.1000/–ல் இருந்து ரூ.2500/– ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.1) துறை.

**அரசாணை (நிலை) எண். 59** **நாள்: 17.07.2012.**

**படிக்கப்பட்டவை:**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் ந.க. எண்.31921/2012/மு.சு.தி.1 நாள் 2.5.2012.

*******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.4.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு:–

சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன்படி, மாநில அரசின் பங்கு 2,500 ரூபாய் எனவும், மத்திய அரசின் பங்கு 2,200 ரூபாய் எனவும், பயனாளியின் பங்கு 300 ரூபாய் எனவும் இருக்கும். இதன்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை 5,000 ரூபாய் என உயர்த்தப்படுகிறது. இந்த நடவடிக்கையின் மூலம், தமிழ்நாடு முழுவதும் சுகாதார கிராமங்கள் உருவாகும்

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 2003–ம் ஆண்டில் துவக்கப்பட்ட ''தூய்மையான கிராம இயக்கம்'' என்ற திட்டத்தின்படி, திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், தனிநபர் இல்லங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் திறந்த வெளி மலம் கழித்தலை அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன என்றும் 2006 ஆம் ஆண்டில், முந்தைய அரசால் கைவிடப்பட்ட இத்திட்டம் 2011–12 ஆம் ஆண்டில் மீண்டும்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இதன் மூலம் அனைத்து கிராமங்களும் முழுமையான சுகாதாரம் என்கிற நிலையை அடைய வழிவகை ஏற்பட்டுள்ளது என்றும் மேலும், 2001 முதல் 2004 வரை கட்டப்பட்ட ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் சரிவர பராமரிக்கப்படாததால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்தன என்றும் இதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 2011–12 ஆம் ஆண்டில் ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.170 கோடி செலவில், 12,793 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சுகாதார கிராமங்களை உருவாக்கும் வண்ணம், மத்திய அரசின் ''முழு சுகாதாரத் திட்டத்தின்'' கீழ் தற்போது ஒரு இல்லத்திற்கான தனிநபர் கழிவறை கட்டும் பொருட்டு, மத்திய அரசின் சார்பில் ரூ.2,200/– மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ.1,000/– வழங்கப்படுகிறது என்றும் இதில் பயனாளியின் பங்குத் தொகை ரூ.300/– ஆகும் என்றும் ஆக மொத்தம் ரூ.3,500/– செலவில் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டப்படுகிறது. என்றும் தற்போது, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள ரூ.3,500/– என்பது போதுமானதாக இல்லையென்றும், இந்தத் தொகையை வைத்து, தனி நபர் இல்லக் கழிப்பறையை முழுமையாக அமைத்திட இயலாது என்றும், இந்தத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளதனை நிறைவேற்றும் வகையிலும், சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனி நபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை ரூ.1,000/–ல் இருந்து ரூ.2,500/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 26.4.2012 அன்று அறிவிக்கப்பட்டது என்றும் இதன்படி, மாநில அரசின் பங்கு ரூ.2,500/– எனவும், மத்திய அரசின் பங்கு ரூ.2,200/– எனவும், பயனாளியின் பங்கு ரூ.300/– எனவும் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இதன்படி, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை ரூ.5000/– என உயர்த்தப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாட்டில், முழு சுகாதார திட்டத்தின் கீழ் 2012–13 ஆம் ஆண்டிற்கான செயலாக்கத் திட்டத்திற்காக (Annual Implementation Plan), மத்திய அரசு ரூ.186.42 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது என்றும் இதில் 4,56,901 தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கான மத்திய அரசின் பங்கு தொகை ரூ.100.51 கோடி அடங்கும் என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 2012–2013–ம் ஆண்டில் கட்டப்படவுள்ள 4,56,901 கழிப்பறைகளைக் கட்டத் தேவையான நிதி விபரங்களை பின்வருமாறு அளித்துள்ளார்:

| | | |
|---|---|---|
| 2012–13–ல் கட்டப்படவுள்ள தனிநபர் இல்லக் கழிப்பறைகளின் எண்ணிக்கை | : | 4,56,901 |
| மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 2500 x 4,56,901 | : | ரூ.114,22,52,500 |
| மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.2,200 x 4,56,901 | : | ரூ.100,51,82,200 |
| பயனாளியின் பங்கு ரூ.300 x 4,56,901 | : | ரூ.13,70,70,300 |
| மொத்தம் | : | ரூ.228,45,05,000 |

**5.** எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், **2012–2013** ஆம் ஆண்டில் **4,56,901** தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.**114,22,52,500/–** (ரூபாய் நூற்றி பதினான்கு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கோரியுள்ளார்.

**6.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், ஒரு கழிப்பறைக்கு மாநில அரசின் பங்குத்தொகையான ரூ.**1000/–**லிருந்து ரூ.**2500/–** ஆக உயர்த்தியும் அதன் அடிப்படையில் **2012–2013** ஆம் நிதியாண்டில் **4,56,901** தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு மாநில அரசின் பங்குத்தொகையான ரூ.**114,22,52,500/–**ல் (**4,56,901** x ரூ.**2500/–**) **2012–2013** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் முழு சுகாதாரத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.**40.00** கோடியை (ரூபாய் நாற்பது கோடி) மட்டும் விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

**7.** மேலே பத்தி **6–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> **2215** – குடிநீர் வழங்கலும் துப்பரவும் – **02** கழிவு நீரகற்றும் துப்பரவும் – **105** – துப்பரவுப் பணிகள் – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் **II** மாநிலத் திட்டம் – JL முழுமையான துப்பரவு இயக்கம் – **09** உதவித்தொகை – **03** – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (து.தொ.கு **2215 02 105** JL **0931**)

**8.** மேற்கண்ட தொகையினை பெற்று செலவிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**9.** இத்திட்டத்திற்கு தேவைப்படும் மீதித்தொகையான ரூ.**74,22,52,500/–** (ரூ.**114,22,52,500** – ரூ.**40,00,00,000**) இல்லக் கழிப்பறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் மத்திய அரசால் விடுவிக்கப்படும் நிதியின் அடிப்படையிலும் விடுவிக்கப்படும். இந்த கூடுதல் செலவினம் புது துணைப் பணி (New Instrument of Service) குறித்த செலவினமாக கருதப்படும். இதற்காக சட்டப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும்.

**10.** சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில் இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்படும் இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சித் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டில் துணை மதிப்பீட்டில் சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகள் செயலாக்கத்திற்கு தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு அனுப்புமாறு ஊரக வளர்ச்சித் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**11.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். **229**/JS (PM)/2012 நாள் **16.7.2012–**இல் பெற்ற இசைவுடன் மற்றும் கூ.நி.பே.எண்.**696** (அறுநூற்று தொண்ணூற்று ஆறு) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச. பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – **15.**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மூலமாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை – **6/18/35.**

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – **9.**
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை–**9.**
மாண்புமிகு அமைச்சர் (ந.நி (ம) ஊ.வ) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்
முதன்மைச் செலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை–**9**
நிதித் (ஊ.வ.(ம) ஊ.)/வ.செ.பொ. I,II) துறை, சென்னை – **9.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்